புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# இமையத்தின் 'கண்கள்' சிறுகதை - ஓர் ஆய்வு

**ஆய்வாளர்**

**க.ஜெயகாந்தி,** *முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),*

*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,*

*ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி),* ***(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)***

*திருச்சிராப்பள்ளி - 620 020.*

**நெறியாளர்**

**முனைவர்.க. இக்பால்,** *இணைப்பேராசிரியர்,*

*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*

*ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி),*

*திருச்சிராப்பள்ளி - 620 020.*

**ஆய்வுச் சுருக்கம்**

இமையத்தின் கொலைச்சேவல் என்னும்; சிறுகதைத் தொகுப்பில் உள்ள ஷகண்கள்| என்ற சிறுகதை இங்கு ஆய்வுக்களமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவ்வண்ணம் இச்சிறுகதையின் கதைச்சுருக்கம், பாத்திரப்படைப்பு முதலியவை இங்கு எடுத்துக் கூறப்படுகிறது.

**கலைச்சொற்கள்**

கண் ஆப்பரேசன் - ஆஸ்பத்திரி - கெயவன் - ஆடுவ - டி.வி ரிப்பேர் - மெக்கானிக் - கிடா வெட்டு.

**கதைச்சுருக்கம்**

வயதான பெரியசாமி கவுண்டர், பலமுறை தன் மூன்று மகன்களிடமும் தனித்தனியாகச் சென்று தன் கண்ணை மருத்துவரிடம் காட்டி சரி செய்ய தன்னை

*அழைத்துச் செல்லக் கேட்கிறார். அவர் மூன்று மகன்களும் அவர் கூறுவதை ஒரு பொருட்டாகக் கூட காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. பெரியசாமி கவுண்டர் எதிரே வரும் யாருடைய உருவமும் தெளிவாகத தெரியவில்லை. எதிரே வரும் உருவங்கள் மனித உருவங்களாகத் தெரியாமல் கற்சிலைகளாகத்தான் அவருக்குத் தெரிந்தது. பேச்சு சத்தத்திலிருந்துதான் பக்கத்தில் ஆட்கள், இருக்கிறார்கள் என்று தெரியும். வாய்ச் சத்தத்தை வைத்துதான் அந்த இடத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். கண்பார்வை சுத்தமாகத் தெரியவில்லை என்று ஆன பிறகு அவருக்குப் பூமிக்குள் உட்கார்ந்திருப்பது மாதிரிதான் இருந்தது.*

*பெரியசாமிக்குக் கண்பார்வை குறைய ஆரம்பித்து இரண்டு வருசமாகிவிட்டது. நினைவு தெரிந்த நாளிலிருந்து ஆடுகளை மேய்த்துக் கொண்டு காட்டிலேதான் கிடப்பார். ஒரு பட்டி ஆடுகளை ஒரே ஆளாகத்தான் மேய்ப்பார். ஆடுகளோடு காட்டில் திரிவதுதான் அவருக்குப் பிடிக்கும். தீபாவளி, பொங்கல் போன்ற விசே~ நாட்களில் கூட அவரால் வீட்டில் இருக்க முடியாது. வாயில்லா ஜீவன் பட்டினியாகக் கெடக்குதே. அதெப் பட்டினிப் போட்டுட்டு நாம்ம எப்பிடி சோறு திங்கிறது? என்று சொல்லி ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டு போய்விடுவார்.*

*பத்து இருபதடி தூரத்தில் இருக்கிற பொருள் கூடத் தெரியவில்லை இதனால் ஒன்றிரண்டு ஆடுகள் காணாமல் போய்விட்டன. ஆடுகள் பயிர் நிலத்தில மேய்ந்துவிடுவதாகப் பலர் சண்டைக்கு வந்தனர். தன்னுடைய கண்கள் என்ன நிலையில் இருக்கும். ஆப்பரேசன் செய்ய முடியுமா, செய்ய முடியாது என்று சொல்லிவிட்டாள். கண்கள் என்ன நிலையில் இருக்கும் ஆப்பரேசன் செய்ய முடியாது என்பதை யோசிக்க யோசிக்க அவருக்குப் பதட்டமாகிவிட்டது. தன்னுடைய குல தெய்வத்திடம் ஷஎங்| கண்ண நல்லபடியா வை. டாக்டரு மனச மாத்து.அது சரியில்லை இது சரியில்லை என்று சொல்லி ஆப்பரேசன் செய்ய மருத்துவர் மறுக்காமல் இருந்தால் கிடா ஒன்று வெட்டுவதாகவும் அவருடைய மனம் ஓயாமல் புலம்பிக்கொண்டேயிருந்தது. அதோடு யாருக்கும் தெரியாமல் மனம் ஓயாமல் நான் வீட்டை விட்டு வந்து ஆப்பரேசன் செய்ய முடியாமல் போனால் மருமகள்கள் ஊளைக் கண்ணன் போன இடம் விடியாது. ஆடுவ ஊட்ட சாபம்தான் அவன் இப்பிடி ஆச்சி. ஆடுவுள எம்மாம் அடி அடிச்சான் பாவி என்று சொல்லிக் கேவலமாகப் பேசுவார்களே என்ற கவலை அவரை வாட்டியது.*

***"நல்லாயிருந்த கண்ணுக்கு என்னா கேடுகாலம்? ஒரு பட்டி ஆடு இருக்கிறதப் பாத்திட்டு ஊருல எவனாவது செய்வின எதனாச்சும் செஞ்சியிருப்பானோ?" 1*** *உறுத்தலுக்காக ஓயாமல் தேய்ந்து தேய்ந்து இரவும் பகலும் நிற்காத வலி கண்ணில் உண்டாகி விட்டது. வலி தாங்க முடியாமல் கண்ணையே தோண்டி எடுத்துவிடலாம் என்று கூட சில நேரங்களில் நினைப்பார். கண்ணுக்குள் சிறிய கல் ஒன்று உருள்வது மாதிரி இருக்கும். வலி உயிர் போகும். இரு கண்களிலும் வலி வந்த பிறகுதான் படிப்படியாகப் பார்வை குறைய ஆரம்பித்தது. இந்த நிலையில்தான பெரிய மகனிடம் விசயத்தைச்*

சொன்னார். "***அப்பிடியா? வயசானா கண் பார்வை குறையத்தான் செய்யும்"2*** என்று மதுரைக்குப் போன ஆயிரம் ரெண்டாயிரம்ன்னு செலவு ஆகும். அதுக்கெல்லாம் வழி பண்ணிட்டுப் பாக்கலாம். என்றதோடு சரி. இரண்டாவது மகனிடம் கண் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்று சொல்லி நச்சரிக்க ஆரம்பித்தார்.

***"எம் மாமியாளுக்கு வவுத்து வலியாம வவுத்திலே கட்டி இருக்காம். அதெயே போயிப் பாக்க நேரமில்லெ. இதுல உங் கூட யாரு வர்றது?" 3***

மூணாவது மகனிடம் கேட்டுப் பார்த்தார். செஞ்சிக்க என்றான். "***கூட யாரு தொணக்கி வர்றது?" 4*** என்று கேட்டதற்கு ***"சும்மா நைநைன்னுக்கிட்டு நிக்காத டி.வி.ரிப்பேராப் போயி மூணு நாளா கெடக்கு டி.வி. மெக்கானிக்க வாடான்னன். காலயிலியே வரன்னு பயலக்காணுமேன்னு நானே தவிச்சிப் போயி நின்னுக்கிட்டிருக்கன். இந்த நேரத்திலே வந்து அது இதுன்னுக்கிட்டு போப்பா. போயி சோத்தத் தின்னுப்புட்டுப் படு. பேச்செ நிறுத்திப்புட்டெல்லெ" 5*** அதுவே போதும் என்று அவனுடன் ஒதுங்கிவிட்டான். இரண்டு கண்களிலும் வலி தாங்க முடியவில்லை. உயிர் போய் உயிர் வந்தது. ஒரே ஒரு நாளு பெத்த அப்பனுக்காக மெனக்கிட கூடாதா? மெனக்கிட்டா கெட்டாப் போயிடுவிங்க நான் கண்ண மூடித்தூங்கி எத்தன நாளு ஆவுது தெரியுமாடா? நான் ஒருத்தன்தான் ஒனக்கு மவனா? என்னை மட்டும்தான் பெத்தியா? அப்பறம் என்ன அப்பன் மவன் போதும்ன்டா சாமி நான் புள்ளெ பெத்ததால கண்ட பலன். நரகத்தை என்னன்னு இங்கியப் பாத்திட்டன், நரகத்த கடவுளு படைக்கல மனுசன்தான்டா உண்டாக்கிட்டான் நரகத்த. கடைசியா பெரியசாமி தன்னுடைய காலம் இப்படியேதான் போகப் போகிறது என்று எதுவும் பேசாமல் இருந்து விட்டார். நேற்றிரவு அவருடைய பெரிய மகனின் மகள் தெய்வானை ஊரில் இருந்து வந்தாள். என்னா தாத்தா, இப்பிடிக்கெடக்குற பெத்த மவனுவோ பாக்கலன்னா என்னா?. நான் பாக்க மாட்டனா? ***"நாளக்கி பள்ளிக்கூடத்திலே ஓசியில கண்ணு பாக்குறாங்க. இப்பலாம் சனங்க இப்பிடித்தான் கண்ண சரி பண்ணிக்கிறாங்க. நம்பளுக்கு ஒரு பைசா செலவில்லெ. எல்லாம் அவுங்க செலவுதான். தருமமா பண்றாங்க. ஓசியில இந்த மாரி செய்றாங்களே இவங்களுக்கு இதனால என்ன கெடைக்கும்" 6*** என்றார். அவுங்களுக்கு இதனால ***"புண்ணியம்தான் கெடைக்கும் தாத்தா" 7***

சரி காலையில போலாம் போய் தூங்கு என்கிறாள் போன தெய்வானையிடம் அவளுடைய அம்மா. "***கெயவன் ஒங்கிட்டயும் புராணம் படிச்சானா? 8*** என்று கடுப்புடன் கேட்டாள். ***"கண்ணு தெரியாத ஆள ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டுப் போவாம படுக்க வச்சியிருந்த. யாருதான் பேசாம இருப்பாங்க." 9*** அவருடைய கண்கள் கலங்கின. கடைசியாகப் பெரியசாமி அழுதது அவருடைய அம்மா செத்தபோதுதான் அது ஆச்சி பதினெட்டு வருசம் அவருடைய மனைவி இறந்தபோது கூட அவர் அழவில்லை.

***முன்னுரை***

*பெரியசாமி கவுண்டர் கதையின் முக்கிய கதாபாத்திரம் சாதாரணமாக அவள் யாரிடமும் வீணாகப் பேச்சு வைத்துக்கொள்ள மாட்டார். கூச்ச சுபாவம் உள்ளவர் முகப் பழக்கம் உள்ளவர்களிடமே அதிகம் பேசமாட்டார். ஜாதகத்தின் நம்பிக்கை உள்ளவர். பெரியசாமிக்கு கண்பார்வை குறைய ஆரம்பித்து இரண்டு வருசமாகிவிட்டது. ஒரு பட்டி ஆடுகளை ஒரே ஆளாகத்தான் மேய்ப்பார், 'ஆட்டெ பெருக்குங்கடா, குடும்பம் பெருகும்' என்று மகன்களிடம் சொல்லுவார். இலவசமாக கண் ஆபரேசன் செய்வதைக் கேள்விப்பட்டு தன் பேத்தி மூலம் இங்குவந்தார். ஓசின்னா அவுங்க இடம்தான், காசி பணமா கொடுத்திருக்கம் ஏன்டா இப்பிடி செய்யுறீங்கண்ணு கேக்கிறதுக்கு, இதெ வுட்டாலும் நமக்கு வேற விதி கெடயாதே' மருமகள்களிடம் ஏச்சும், பேச்சும் வாங்கிக் கொண்டிருந்தார்.' ஊளக்கண்ணன் போன இடம் விடியாது. ஆடுவ சாபம் அவன இப்பிடிதித்த வைக்குது. "ஆடுவுள எம்மாம் அடி அடிச்சான் பாவி. கண்ணிலிருந்து வழியும் தண்ணீரைத் துடைப்பதே பெரும் வேலையாக இருந்தது. இமையைத் தேய்ககாமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. கடைசியில் தானே ஆட்டை ஓட்டிக் கொண்டு போய்வந்துவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போவதென்று முடிவு எடுத்தார். பெரியசாமிக் கவுண்டர் கண் தெரியாமல் படும் அவஸ்தையை ஆசிரியர் இமையம் கண்ணின் முக்கியத்துவம் பிள்ளைகள் இருந்தும் ஒரு தந்தையின் அவஸ்தையை அவர்களால் உணர்ந்துகொண்டு பெற்ற தாய் தந்தையைக் காப்பாற்ற தவறிவிடும் நிலையை இங்கு ஆசிரியர் எடுத்து வைக்கிறார். வயதான பிறகு நமக்கும் அதே நிலைதான் என்பதை ஒவ்வொரு பிள்ளைகளும் அறிந்துகொள்ள வேண்டும். "ராவு எது பவல் எதுன்னு தெரியாம ஒரு ஆளு எதுக்குடா உசுரோட இருக்கணும்" பெத்த அப்பன என்னா ஏதுன்னு கேக்காதவனுக்கும் பாக்காதவனுக்கும் எல்லாம் எதுக்குடா மீச?"*

***பாத்திரப்படைப்பு***

*பாத்திரப்படைப்பு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது.*

- *தலைமை மாந்தர்*
- *துணைநிலை மாந்தர்*
- *எதிர்நிலை மாந்தர்*

*மேற்காணும் மூன்று பகுதிகளில் இச்சிறுகதையில் இடம்பெறக்கூடிய கதாபாத்திரங்கள் கதையை நகர்த்திச் செல்லும் போக்குகள் விளக்கப்படுகின்றன. இச்சிறுகதை இதர பாத்திரங்கள் இருந்தும் கதைக்குத் தேவையான இன்றியமையாத பாத்திரங்களின் வழியாக வாசகனை ஒரே நேரத்தில் கதையை வாசிக்கச் செய்துவிடுகிறார் ஆசிரியர். ஆசிரியரின் படைப்புத்திறன் கதை சொல்வதன் வழியாக வெளிப்படுகிறது.*

***பெரியசாமி கவுண்டர்***

*இவர் இச்சிறுகதையில் தலைமைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார். கண் தெரியாமல் அவர் படும் பாட்டை ஆசிரியர் இமையம் தெளிவாக விளங்கும்படி எடுத்துரைக்கிறார்.*

*என்னோட கை வேணுமின்னாலும் எடுத்துக்குங்க. எனக்குக் கண்ண மட்டும் எப்பிடியாச்சும கொடுங்க சாமி*

*தனியாவா வந்து இருக்கிங்க?*

*ஆமாங்க*

*ஆப்பரேசன் செய்யும்போது கூட கட்டாயமா ஒரு அட்டண்டர் இருக்கணுங்க,*

*நான் எங்க போவேன். எனக்கு கூட யார் வருவா?*

*நீண்ட வராந்தாவில் இருபது முப்பது பேர் உட்கார்ந்திருந்த வரிசையில் உட்கார்ந்திருப்பது பெரியசாமிக்கு என்வோ மாதிரி இருந்தது. ஆடுமாடுவுள வரிசயாக் கட்டிப்போட்டு இருக்கிற மாரி இருக்கு. சந்தைக்கிப்போன ஆடுவுளுக்கு டோக்கன் போட்டுவுடுத மாரி கையில டோக்கனைக் கட்டிவுட்டுட்டாங்களே. என்று நினைக்கிறார்.*

*நாளது தேதி முட்டும் எனக்குன்னு காலணா வச்சிக்கிட்டவன் கெடயாது. செலவு பண்ணிக்கிட்டதும் கெடயாது. புள்ளெ மக்க நல்லா இருந்தா போதுமின்னு இருந்தன்,ஈ, எறும்பு கடிக்காம வளத்ததுக்கு என்னா செஞ்சாங்க? இன்னிக்கி அனாதி மாரி வந்து குந்தியிருக்கன், இதுல புள்ளெ என்னை? அப்பன் என்ன? ஊரு ஒலகத்திலே இப்படிப்பட்ட புள்ளிவுள எங் கண்ணாலயும் கண்டதில்லெடா என்று புலம்புகிறார். யாருக்கும் இந்த நிலெ வரக்கூடாது. என்று ஆசிரியர் விளக்குகிறார்.*

***2. துணைநிலை மாந்தர்***

*இங்கு பெரியசாமி கவுண்டரின் மூன்று மகன்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை. தன் மூன்றாவது மகனிடம் கேட்டுப் பார்க்கலாம் கடைசியாக சின்னமகனை வீட்டில் தேடினார். ஆளில்லை. பெருமாள் கோவிலில் இருப்பதாகத் தகவல் தெரிந்ததும் கைத்தடியை எடுத்துக்கொண்டு கோவிலுக்குப் போனார். பெருமாள் கோவிலுக்கு முன்னால் இருந்த அரசமரத்தின் கீழ் சீட்டு ஆடிக்கொண்டிருந்தவனிடம் போய், ‘உசுரு போவுது. ஆஸ்பத்திரிக்கு போவணும் காசி பணம் இருந்தாக் கொடு. கூட தொணக்கி ஒரு ஆளு வேணும். செத்த ஒரு நாளு மெனக்கிட்டு வந்து என்னா ஏதுன்னு பாரு, பெரியசாமி சொன்னதைக் காதில் வாங்காமல் இங்கெல்லாம் எதுக்கு வர்ற? ஊட்டுல இருக்கும்போதே சொல்லக்கூடாதா? மெதல்ல ஊட்டுக்குப் போ மத்ததெல்லாம் அப்புறமாப் பேசிக்கலாம் என்று எரிந்து விழுந்தான். கண்ணு தெரியலங்கிற. இங்க வர மட்டும் எப்பிடிக் கண்ணு தெரிஞ்சிது? மனுசனைச் செத்தநேரம் அப்படி இப்படின்னு இருக்க வுட மாட்டீர்களே. என்று கத்தினான். தந்தை கண் தெரியாமல் படும் அவலத்தை அவன் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.*

*3. எதிர்நிலை மாந்தர்*

*பெரியசாமி துடிப்பதைப் பார்த்து எதிர்வீட்டுப் பெண் வந்து வயசான காலத்திலே வெக்கப்பட்டா முடியுமா? பெத்த புள்ளீவோகிட்டெ எதுக்கு வீம்புபண்ற, போ, போயி ஒன்னோட சின்ன மவன் கிட்டியாவது சொல்லி நூறு அம்பத வாங்கிக்கிட்டுப் போயி ஆஸ்பத்திரியிலெ காட்டு வேணுமின்னா என் மவனக்கூடத் தொணக்கி அனுப்புறன்!*

**தொகுப்புரை**

*சமூகத்தில் பல தவறுகள் இயல்பாகவே நடக்கிறது. இதை தெரிந்தும், தெரியாமலும் ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு தெருவிற்கும், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் அநீதி இழைக்கப்படுகின்றன. இது உண்மைதான். ஆனால் வீட்டில் தன் வாழ்நாள் முழுவதையும் தான் பெற்ற பிள்ளைகளுக்காக வாழும் ஒரு வயதான தன் தந்தையை அவர்படும் க~;டத்தைப் பெற்றப் பிள்ளைகளே கண்டுகொள்ளாதபோது நாம் குறை கூறமுடியாது.*

- *வீட்டிற்கு வரும் மருமகளுக்கு வயதானவரைப் பற்றிய நினைவில்லை. தன் தந்தை போன்று அவரை நினைத்து அவரைக் கவனித்துக்கொள்ளலாம் அதற்கும் அவளுக்கு மனதில்லை.*
- *டி.வி. ரிப்பேராப் போயி மூணு நாளா கெடக்கு மெக்கானிக்க வர சொல்லியிருக்கேன். பயலக் காணுமேன்னு நானே தவிச்சுப் போயி நின்னுக்கிட்டிருக்கன். நீ போய் சோத்தத் தின்னுட்டுப் போயி படு. என்று கூறும்போது சமுதாயத்தின் போக்கு எடுத்துக்காட்டப் படுகின்றது.*
- *எம் மாமியாருக்கு வவுத்துல கட்டியாம் அதெயே போயிப் பாக்க நேரமில்லெ. உங்ககூட நான் எப்படிவரது போப்பா என்று பெற்ற மகன் கூறும் அவல நிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.*
- *என்னது, நீ வளத்தியா? நீ ஆடு மேய்க்கப் பொனப்ப ஒனக்குச் சோறு போட்டது யாரு? ஆடுவுளப் போட்டிச்சி என்று கேட்டு தகராறு செய்தான் நடு மருமகன்.*
- *கடைசி மருமகள் வந்து ஷஷகண்ணு தெரியலங்கிறதுக்காக ஆட்ட வித்துத்தான் பார்க்கணுமா? கெயவனோடகிருசப் பாத்தியா?*
- *நான் நல்ல சோறு போட்டப்பவே வீணாப்போன சோறு போட்டன்னு மவன்காரன் கிட்டெச் சொல்லி எனக்க அடிக்க வச்ச ஆளுதான் இவன். கண் அவிஞ்சிப் போனாலும் வாயி அவியலப் பாத்தியா?*

***முடிவுரை***

*ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோர்களை அவர்கள் கடைசி காலம் வரை அவர்களை நன்கு கவனித்துக்கொள்ளவேண்டும். அவர் கண்ணை சரிசெய்ய ஒரு கோடியா செலவு புடிக்கும்? அப்படியே ஆனாலும் பெத்த அப்பனுக்காக பிள்ளைகள் செலவு செய்யக் கூடாதெ என்று சாடுகிறார். காலம் முழுவதும் பிள்ளைகளுக்காக வாழும் பெற்றோர்களை பிள்ளைகள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.*

*இந்தக் கீவூட்டுப் பேச்சாலதான் நீ கண்ணு தெரியாம நிக்குற, தெரியுதா, போ, போ, போயி வேலயப் பாரு, திரும்ப ஏதாவது பேசுனா மானம் மரியாதயெல்லாம் போயிடும் என்ற ஒரு தகப்பனைப் பாரித்து மகன் கேட்க எந்தப் பெற்றவனாலும் பொறுத்துக் கொள்ளமுடியாது. பெரும்பாலும் சமூகத்தின் நிகழ்வுகளையும் கதையின் கருவாக எடுத்துக் கொள்கின்றனர். மேற்கண்டநிலைகளில் ஆசிரியரின் படைப்புத்திறன் வெளிப்படுகிறது.*

## References


1. Imaiyam, kolaicheval sirukatha thoguppil ulla ‘kankal’ sirukathai, p.157, first edition 2013, Second Edition 2014. Publications Address: Thiruvanmiyur, Chennai.
2. Ibid. P. 158
3. Ibid. P. 158
4. Ibid. P. 159
5. Ibid. P. 159
6. Ibid. P. 164
7. Ibid. P. 164
8. Ibid. P. 165
9. Ibid. P. 165